மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இராமேஸ்வரத்தில் பயணிகள் இறங்குவதற்கு வசதிகள் பெருக்கப்பட்டிருக்கின்றன.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவரவர்களே, தற்போது இலங்கையிலிருந்து நிறைய அகதிகள் நம்முடைய தமிழ்நாட்டை நோக்கி வருவதால் வாரம் இரண்டு முறைகள் விடும் கப்பலை இன்னும் 2 நாள் கூட்டி விட அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, தற்போது இரண்டு முறை ஓடிக்கொண்டிருப்பதே போதுமானதாக இருக்கின்றது. தலைமன்னாரிலிருந்து செவ்வாய், வியாழன் இரண்டு நாட்களில் புறப்பட்டு வருகின்றன. பிரயாணிகளுக்கு இடமில்லாமல் போனதாக, அரசுக்குத் தகவல் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, தமிழகத்தில் இருக்கும் எல்லாத் துறைமுகங்களையும், மைனர் போர்ட்ஸ், மேஜர் போர்ட்ஸ் எல்லாவற்றையும் தொட்டுச் செல்லும் முறையில் கப்பல் போக்குவரத்து வசதியைச் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, நமது சேதுக்கால்வாய்த் திட்டம் முடிந்த பிறகு அப்படிச் செய்ய முடியும். தற்சமயம் அப்படிச் செய்ய முடியாது. ஏனென்றால் தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு வர வேண்டுமென்றால் இலங்கையைச் சுற்றிக்கொண்டு வர வேண்டியிருக்கிறது. எனவே, அதற்குத் தகுந்த வசதியில்லை.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, இராமேஸ்வரத்திலிருந்து வரும் கப்பல் கடலிலேயே ஏறத்தாழ இரண்டு மைல்களுக்கு அப்பால் நிற்கிறது. கடற்கரை ஓரமாக வருவதற்கு ஏதாகிலும் வசதி ஏற்படுமாறு அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அதற்கான ஏற்பாடுகள் ஆய்வில் இருக்கின்றன.

வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள்

* 189. வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, will the Hon. Minister think of starting at least one Agricultural University in Thanjavur district?

1971 ஜூலை 10]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தனியாக அந்தக் கேள்வி வருகிறது. அந்த உத்தேசமும் இல்லை.

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, தெற்கு மாவட்டங்களை ஒன்றாக இணைத்து மதுரையிலே அக்ரிகல்சுரல் யூனிவர்சிட்டியை அமைப்பதன் மூலம் தென்மாவட்டங்களுக்கு வசதியாக இருக்கும். எனவே மதுரையில் ஏற்படுத்த மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மதுரை வேளாண்மைக் கல்லூரி இப்பொழுது கோவைக் கல்லூரியோடு இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே மதுரைக்கு அவசியமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், கோயம்புத்தூரில் பல்கலைக்கழகம் ஏற்கனவே ஆரம்பிக்க இந்தச் சபை முடிவு செய்து சீக்கிரம் ஆரம்பிக்கப்படக்கூடிய நிலையிலே இருப்பதால், தஞ்சை, திருச்சி போன்ற இடங்களில் கல்லூரிகள் துவங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, கோவையில் இப்பொழுது பல்கலைக்கழகம் 1—6—1971 முதல் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மதுரைக் கல்லூரி கோவையோடு இணைக்கப்பட்டிருக்கிறது. திருச்சி, தஞ்சையைப் பொறுத்தவரையில் திருச்சியில் இப்பொழுது கலைஞர் கருணாநிதி ஆராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அமைச்சரவை முடிவு செய்தபடி திருச்சியில் துவக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சையைப்பற்றி அப்படி இப்பொழுது திட்டம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, விவசாயக் கல்லூரி இல்லாத ஜில்லாக்களுக்கு ஏதாவது பிரையாரிட்டி கொடுக்க அரசாங்கத்திடம் செயற்குறிப்பு இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திரு. வீ. சா. இளஞ்செழியன் : தலைவரவர்களே, திருச்சியிலே ஆரம்பிக்கப்படுகின்ற கல்லூரி பேரறிஞர் அண்ணா அவர்களின் பண்ணையில் ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கனம் அங்கத்தினருடைய யோசனை கவனிக்கப்படும்.

* 190. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் விவசாயப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்க அரசு ஆலோசனை செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது எங்கு துவக்க உத்தேசித்துள்ளது?